## ① கீழ்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, விடைக்கான எழுத்துக்குரிய கூட்டில் புள்ளடி (X) இடுக.

1. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகளின் எண்ணிக்கை
   1. 30 2. 18 3. 12 4. 247
   (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

2. சுட்டெழுத்துகளாக அமையக் கூடிய எழுத்துக் கூட்டம்
   2. எ, ஏ, யா 2. அ, இ, உ 3. ஏ, ஓ, உம் 4. அர், அன், அள்
   (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

3. இயல், இசை, நாடகம் மூன்றையும் சேர்த்துக் கூறும் ஒரு சொல்
   1. முந்நாடகம் 2. முத்தமிழ் 3. மூவிலக்கணம் 4. முத்தொடர்
   (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

4. 'ங ஞ் ண் ந் ம் ன்' எழுத்துக் கூட்டத்தின் வகைப்பெயர்
   1. தமிழினம் 2. வல்லினம் 3. மெல்லினம் 4. இடையினம்
   (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

5. தமிழ் முதலெழுத்துகள்
   1. 30 2. 18 3. 12 4. 247
   (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

6. புவி உயிரினங்களுக்கு அளித்த சூழல் தொகுதி
   1. மண் 2. கடல் 3. காடு 4. நாடு
   (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

7. அடைமொழியோடு கூடிய பெயர்ச்சொல்
   1. கண்ணன் 2. செய்து வந்தான் 3. தாமரை 4. அழகிய பெண்
   (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

8. போர்க்களத்தில் கொட்டும் முரசின் பெயர்
   1. மணமுரசு 2. பிணமுரசு 3. கொடைமுரசு 4. போர்முரசு
   (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

9. கயிலைவன்னியன் ஆட்சிசெய்த ஆண்டுகள்
   1. 34 2. 54 3. 38 4. 58
   (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

10. 'ஈட்டல்' என்ற சொல்லின் எதிர்ப்பொருட் சொல்
    1. இழத்தல் 2. இரவு 3. தேடுதல் 4. விரட்டுதல்
    (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

11. கந்தரோடைக்கு நிகரான தலைநகராக, வன்னியில் இருந்த பகுதி
    1. பூநகரி 2. யாழ்ப்பாணம் 3. மட்டக்களப்பு 4. கிளிநொச்சி
    (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

12. சினங்கொண்டவனை மட்டுமல்லாமல் அவனுடைய உற்றார் உறவினர்கள் அனைவரையும் அழித்துவிடுவது
    1. சினம் 2. கனம் 3. அனல் 4. நஞ்சு
    (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

13. அழகுக் கலைக்கு ஒத்தசொல்
    1. நுண்கலை 2. பரதக்கலை 3. அறிவியற்கலை 4. ஓவியக்கலை
    (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

14. ஒரே ஒலி இரட்டித்து வருவதாய் அமையும்; பிரித்தால் பொருள் தராத ஒலிச்சேர்க்கை
    1. இரட்டைக்கிளவி 2. சொல் 3. அடுக்குத்தொடர் 4. ஒற்றைக்கிளவி
    (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

15. ‘பார்த்த’ என்ற சொல்லின் இலக்கணப் பெயர்
    1. பெயர்ச்சொல் 2. வினைமுற்று 3. பெயரெச்சம் 4. வினையெச்சம்
    (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

16. ‘விழுந்து’ என்ற சொல்லின் இலக்கணப்பெயர்
    1. பெயர்ச்சொல் 2. வினைமுற்று 3. பெயரெச்சம் 4. வினையெச்சம்
    (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

17. சினங்காத்தலைப் பற்றிக் கூறும் குறளின் அதிகாரம்
    1. வெகுளாமை 2. சினவாமை 3. தீயாமை 4. எரியாமை
    (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

18. ‘திணை, பால், எண், இடம், காலம்’ என்பவற்றைக் கொண்ட சொல்
    1. பெயர்ச்சொல் 2. வினைச்சொல் 3. இடைச்சொல் 4. உரிச்சொல்
    (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

19. சிலப்பதிகாரத்தின் உருவாக்கத்திற்கு கருவாக அமைவது
    1. சிலம்பு 2. காப்பு 3. தோடு 4. பாதம்
    (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

20. ‘அழகிய பெண் ஓடி வந்தாள்’ என்ற சொல்லியத்தில் ‘அழகிய’ என்பது
    1. பெயரெச்சம் 2. எழுவாய்அடைமொழி 3. செயப்படுபொருள் 4. வினைமுற்று
    (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

21. ‘சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியமாகும்.’ இச்சொல்லியம்
    1. ஏவற்சொல்லியம் 2. வினாச்சொல்லியம்
    3. மெய்ப்பாட்டுச்சொல்லியம் 4. கூற்றுச்சொல்லியம்
    (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

22. சிலப்பதிகாரத்தை எழுதியவர்
    1. சீத்தலைச்சாத்தனார் 2. திருவள்ளுவர் 3. இளங்கோவடிகள் 4. ஔவையார்
    (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

23. ஆற்றுநீர் சலசல என்று ஓடியது. 'சலசல' என்பது
   1. அடுக்குச்சொல்   2. இரட்டைக்கிளவி   3. இரண்டுசொல்   4. ஒற்றைக்கிளவி
   (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

24. ஒருவன் தன்னைத்தான் காத்துக்கொள்வதற்கு காக்கவேண்டியது
   1. அழகு   2. விருந்தோம்பல்   3. சினம்   4. சூழல்
   (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

25. தனித்து நின்று கருத்துத் தராத சொல்
   1. பெயர்ச் சொல்   2. வினைச்சொல்   3. இடைச்சொல்   4. வினைமுற்று
   (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

26. 'கற்க கசடற.' இதில் வரும் தோன்றா எழுவாய்
   1. நீ   2. அவள்   3. அவன்   4. தம்பி
   (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

27. 'சினம் + கொள்ளாதே' என்ற சொல்லைப் புணர்த்தி எழுதினால்
   1. சினம்கொள்ளாதே   2. சினக்கொள்ளாதே
   3. சினங்கொள்ளாதே   4. சினத்துக்கொள்ளாதே
   (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

28. கந்தன் என்ற சொல்லுடன் ஒருசொல்லைச் சேர்த்து முழுச் சொல்லியமாக்கினால்
   1. கந்தன் பாடி   2. கந்தன் பாடுகின்ற
   3. கந்தன் பாடிய   4. கந்தன் பாடினான்
   (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

29. 'சிறிய குன்று அருகில் வீடு இருந்தது.' இச்சொல்லியத்தின் காலம்
   1. நிகழ்காலம்   2. இறந்தகாலம்   3. எதிர்காலம்   4. நல்லகாலம்
   (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

30. 'வெண்கட்டி' என்ற சொல்லைப் பிரித்தெழுதினால்
   1. வெள்ளை + கட்டி   2. வெண் + கட்டி
   3. வெண்மை + கட்டி   4. வெண்ணை + கட்டி
   (1) ☐ (2) ☐ (3) ☐ (4) ☐

**(30 x 1 = 30 புள்ளிகள்)**

## ② பாடநூல் வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.

1. கயிலைவன்னியனுக்கு அஞ்சிப் போர்த்துக்கேயர் எங்கெங்கே கோட்டைகள் கட்டினர்?

2. வற்றிய குளத்தில் இருக்கும் கொட்டியும் ஆம்பலும் எதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளன?

3. ஈழத்திலே கண்டறியப்பட்ட பண்டைய தலைநகரங்கள் எவை?

4. சிலப்பதிகாரத்தைக் குறிக்கும் வேறு சிறப்புப் பெயர்கள் மூன்று எழுதுக?

5. ஈசன் உவக்கும் இன்மலர் மூன்றும் எவை?

**(5 x 2 = 10 புள்ளிகள்)**

## ③ பாடலைப் படித்து, வினாக்களுக்கு முழுவிடை எழுது.

அன்பை வளர்க்க வேண்டும்
அறிவைப் பெருக்க வேண்டும்
உன்போல் பிறரை எண்ணி - என்றும்
உதவி புரிய வேண்டும்

நாட்டு நினைப்பு வேண்டும்
நட்பைப் போற்ற வேண்டும்
மானம் பேண வேண்டும் - பிறர்
மதிக்க வாழ வேண்டும்

தாயின் சொல்லைப் போற்று - என்றும்
தந்தை சொல்லை வணங்கு
ஆசானைப் போற்றப் பழகு - அதுவே
அறிவை வளர்க்கும் வழியாம்

1. எதைப் பேண வேண்டும்?

___

2. எதைப் பெருக்க வேண்டும்?

___

3. யாருடைய சொல்லைப் போற்ற வேண்டும்?

___

___

4. அறிவை வளர்க்கும் வழி எது?

___

5. நீ எதனை நினைத்து வாழ வேண்டும்?

___

___

**(5 x 2 = 10 புள்ளிகள்)**

## ④ இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

1. சொற்புணர்ச்சியில் மாறுபடுபுணர்ச்சியின் வகைகளை எடுத்துக்காட்டுடன் தருக.

2. தரப்பட்ட சொற்களை வைத்து பொருள் விளங்குமாறு தனித்தனி சொல்லியம் எழுதுக.

கமகம: ____________________

கலகல: ____________________

3. 'முத்துப் போன்ற பல்' இதில் வரும் உவமானம் எது? உவமேயம் எது?

உவமானம் - ________________

உவமேயம் - ________________

4. 'செல்வி மாலையைக் கட்டி செல்வனுக்குக் கொடுத்தாள்' இச்சொல்லியத்தில் வரும் வேற்றுமை உருபுகளை எழுதுக.

5. சொல்லிய உறுப்புகள் நான்கையும் எழுதுக.

**(5 x 2 = 10 புள்ளிகள்)**

## ⑤ உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.

பண்டைத் தமிழர் தாம் வாழும் நிலத்தை நான்காக வகுத்தனர். அவற்றுக்கு அந்நிலங்களில் மலரும் மலர்களின் பெயரையே வைத்தனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. குறிஞ்சியில் குறிஞ்சிப் பூவும் முல்லையில் முல்லைப் பூவும் மருதத்தில் மருதப் பூவும் நெய்தலில் நெய்தல் பூவும் சிறந்த பூக்களாகும்.

தமிழீழத்தின் வன்னிப்பகுதி முல்லை நிலமாகும். இங்கே தமிழர்களுடைய வீரத்திற்கு உரிய வாகைப்பூ பூக்கும் வாகைமரம் வளர்கிறது. இது தமிழீழத்தின் தேசிய மரமாகும். எமது தேசியப் பறவையான செண்பகமும் முல்லையில் வாழ்கிறது. மான், மரை போன்ற விலங்குகள் வாழும் முல்லைக்காட்டில் சிறுத்தையும் வாழ்கிறது. இது தமிழீழத்தின் தேசிய விலங்காகும். முல்லையில் ஆனிரை (மாடுகள்) மேய்த்தல் முதன்மைத் தொழிலாகும். அதனால், ஆனைந்து எனப்படும் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் என்பன மலிவாகக் கிடைக்கின்றன.

1. பண்டைத் தமிழர் வாழ்ந்த நிலங்களின் பெயர்கள் எவை?

2. தமிழீழத்தின் வன்னிப்பகுதி எந்த நிலவகையைச் சார்ந்தது?

3. எமது தேசியப் பறவையான செண்பகம் எங்கே வாழ்கிறது?

4. எமது தாய் நாட்டின் தேசிய விலங்கு எது?

5. ஆனைந்து எனப்படுபவை யாவை?

**(5 x 2 = 10 புள்ளிகள்)**

**௬ வாழிட மொழியில் உள்ள பந்தியை தமிழில் மாற்றி எழுதுக.**

Valavan og Selvan er venner. Begge to gikk på samme skole. For å krysse veien kom de en dag til et lyskryss. Der stod ei eldre dame. Det lyste rødt. Selvan prøvde å krysse veien. Den eldre dame stoppet dem. "Kjære barn! Man skal over veien kun ved grønt lys", sa hun. Valavan hørte etter den eldre dame og stod der. Selvan prøvde likevel å krysse veien. Da kom en bil med stor fart mot Selvan. Da selvan ble redd og prøvde å løpe tilbake, falt han ned. Skulle dette ha skjedd hvis Selvan hadde etter den eldre dame?

**( 10 புள்ளிகள்)**

**⑦ பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து, அதன் கீழுள்ள குறிப்புகளின் அடிப்படையில் 120 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

**1. விருந்தோம்பல்**

- தொண்டைமான் இளந்திரையன்
- பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை
- திருவள்ளுவர்
- பாவேந்தர்
- சிலப்பதிகாரம்

**2. விபுலாநந்த அடிகள்**

- தாய், தந்தையர் பெயர்
- இளமைக் கல்வி, எழுதிய நூல்கள்
- யாழ்நூலின் சிறப்பு
- பதவிகள், பன்மொழி அறிவு
- இறைவனடி சேர்தல்

**3. கயிலைவன்னியன்**

- வீரஞ்செறிந்த ஆட்சி
- ஏழுபற்றுகள்
- ஆட்சிப்பரப்பு - நட்பு
- கோட்டைகள்

**4. சினங்காத்தல்**

- வள்ளுவரின் கருத்து
- ஔவையாரின் கருத்து
- நன்னெறி கூறும் கருத்து
- ஏன் சினத்தைத் தவிர்க்க வேண்டும்?

**5. மோசிகீரனாரின் கதையைச் சுருக்கமாக எழுதுக.**

**6. இலைதளிர் காலம்**

**(புள்ளிகள் 20)**